WYMAN ENGLISH LANGUAGE INSTITUTE
ENGLISH READING PRACTICE CLASSES
(Books Year 9th, 10th, 11th, 12th)
WEEK DAYS
Mon. | Friday; 3–4 p.m.
WEEK ENDS
Sat. | Sunday; 6–7 a.m.
10.30–11.30 a.m.
Instructor S. B. IYAR 12. Wyman Rd., Nallur.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

WYMAN ENGLISH LANGUAGE INSTITUTE
'TOEFL' Classes
For 86-87 Exams
WEEK DAYS
Mon. | Friday;
11 30 a.m – 1.00 p.m.
WEEK ENDS
Sat. | Sunday;
9.00 a.m. – 10.30 a.m.
Instructor S. B. IYAR 12 Wyman Rd, Nallur.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஆடி மீ 20 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 துல்கஃதா பிறை 28 (05-08-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி: 222

# தமிழ் மொழி பிராந்தியத்துக்கு இந்தியா ஆதரவு?

## டிக்ஸிற் மூலம் சூசகமாக அரசுக்கு அறிவிக்கப்படும்

புதுடில்லி, ஆகஸ்ட் 4

இலங்கையில் தமிழ்மொழிப் பிராந்தியம் அமைக்கும் தமிழரின் அபிலாஷை குறித்து மிகவும் சாதகமான முறையில் பரிசிலனை செய்யும்படி இலங்கை அரசை இந்தியா கோரவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்திய அரசு இது சம்பந்தமான குறிப்பு ஒன்றை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் மூலம் அனுப்பி வைக்க இருப்பதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இன்று (செவ்வாய்) அல்லது நாளை கொழும்பு திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படும் திரு டிக்ஸிற் இந்திய அரசின் குறிப்பைக் கொண்டு வருவார் என்றும் கூறப்படுகின்றது.

முதற்கட்டப் பேச்சுக்களின்போது கூட்டணித் தலைவர்கள் தமிழ் மொழிப் பிராந்தியம் அமைக்கும் கோரிக்கையினை ஜனாதிபதி முன் வைத்து, வலியுறுத்தியும் இருந்தனர்.

இதனை ஏற்றுக்கொள்வதன் மூலமே தமிழ்ப் போராளி அமைப்புக்களைத் திருப்தி செய்ய முடியும் என்றும் கூட்டணித்தலைவர்கள் திரு. ஜெயவர்த்தனாவுக்கு தெளிவாகக் கூறியும் இருந்தனர்.

இதே நேரத்தில் புதுடில்லியில் பிரதமர் (4 ஆம் பக்கம் பார்க்க)



முச்சந்திமுரளி

போன முறையும் மாநாடு, சந்திப்பு நடக்கையுக்கை அத்துலத்தார் வெளியிலே தான் .. இந்த முறையும் அப்பிடித் தான் நடக்கும்...

### அத்துலத்தின் ஐரோப்பிய பயணம்

கொழும்பு, ஆக. 5

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஞாயிற்றுக்கிழமை இரவு ஐரோப்பிய நாடு ஒன்றுக்குப் பயணமானார்.

அரசு — கூட்டணியின் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளத்தான் வந்து விடுவார் என்று அமைச்சர் அத்துலத்முதலி வெளிநாடு புறப்படும் முன்னர் அறிவித்தார். (இ-எ)

# சிப்பாய்கள் சுட்டு இளைஞர் காயம்

## நேற்று மாலை யாழ் நகரில் ஏற்பட்ட திடீர் பதற்றம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

கோட்டை முகாமிலிருந்து சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில் வந்த இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று மாலை ஆறு மணி அளவில் பண்ணை பொலிஸ் விடுதியில் இருந்த சிப்பாய்கள் வெளியேற முற்பட்டனர்.

இதனை அவதானித்த போராளிகள் கைக்குண்டொன்றை வெடிக்க வைத்தனர்.

சிப்பாய்கள் கோட்டை முகாமிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் கே கே எஸ் வீதியால் சைக்கிளில் வந்துகொண்டிருந்த யோசெப் ராஜேந்திரன் (27 வயது) என்பவர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இவருக்குத் தொடையில் காயம் ஏற்பட்டுள்ளது. (இ-10)

### ஜீ.சி.ஈ பரீட்சை சுமுகமாக நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஆக 5

சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சைகள் யாழ் மாவட்டத்தில் எந்தவித அசம்பாவிதமும் இன்றி நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-5)

### நாடாளுமன்றம்

கொழும்பு, ஆக 5

நாடாளுமன்றம் இன்று செவ்வாய் காலை 10 மணிக்குக் கூடுகிறது.

விமானப்படைச் சட்ட மூலம், கடல் சமையலைக்கலைக்கும் சட்ட மூலம் ஆகியன நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். (இ-எ)

### சிப்பாய்கள் கடும் சோதனை

யாழ்ப்பாணம், ஆ. 5

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் நேற்று அதிக நேரம் சிப்பாய்களினால் சோதிக்கப்பட்டனர்.

மாங்குளத்தில் நின்ற சிப்பாய்கள் பஸ்களை மறித்து ஒவ்வொரு பிரயாணிகளாகத் துருவித் (4 ஆம் பக்கம் பார்க்க)

# சென்றமாதத்தில் 262 தமிழர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட். 5

ஜூலை மாதத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 262 தமிழர்கள் உயிரிழந்தனர்; 96 தமிழர்கள் காணாமற்போயினர்.

தமிழ் பேசும் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு அமைப்பாளர் திரு. க சிவானந்தராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

தொகுதிவாரியாக உயிரிழந்தவர்கள் தொகை விவரம் வருமாறு:

| | |
|---|---|
| திருமலை—101 | மட்டக்களப்பு—32 |
| அம்பாறை—08 | யாழ்ப்பாணம்—20 |
| மன்னார்—52 | கிளிநொச்சி—07 |
| வவுனியா—29 | முல்லைத்தீவு—13 |

காணாமற் போனவர்களின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| வவுனியா - 09 | கிளிநொச்சி - 06 |
| முல்லைத்தீவு - 05 | மன்னார் - 12 |
| யாழ்ப்பாணம் - 03 | திருகோணமலை - 43 |
| மட்டக்களப்பு - 14 | அம்பாறை - 04 |

# வயாவிளான் இராணுவ முகாம் வாபஸ் பின்னணி என்ன?

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 5

வயாவிளான் மினி இராணுவ முகாமிலிருந்து இராணுவம் வாபஸ் பெறுவது குறித்து பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்கா அறிவித்தது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ் விடுத்த அறிக்கை வருமாறு:-

வயாவிளானில் உள்ள இராணுவ முகாமை வாபஸ் பெறப்போவதாக சிறீலங்கா இராணுவ அதிகாரி பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்கா அறிவித்துள்ளார்.

வயாவிளான் மகாவித்தியாலய மாணவர்கள் நலன் கருதியும், சுற்றாடலில் உள்ள பொதுமக்களின் நலனுக்காகவுமே இராணுவ முகாம் வாபஸ் பெறப்படப் போவதாக மிகவும் தந்திரமாக மக்களை ஏமாற்றும் விதமாக அவர் செயற்பட்டுள்ளார்.

வயாவிளானில் இராணுவ முகாம் அமைக்கப்படும்போது மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் கோரிக்கையை நிரா (4 ஆம் பக்கம் பார்க்க)

### மின்கம்பத்தில் கட்டப்பட்ட ஐவர்!

கிளிநொச்சி, ஆக. 5

சிறுதிருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட கொள்ளைக் கோஷ்டியினர் ஐவர் உயிருடன் இரண்டு மணி நேரம் மின்சாரக் கம்பங்களுடன் கட்டி வைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் கிளிநொ (4 ஆம் பக்கம் பார்க்க)

முகாமுடன் தொடர்பு கொண்டும் பயனில்லை

### பக்திச் சூழலில்நடந்த மாவிட்டபுரம் தேர்

காங்கேசன்துறை, ஆ. 5

வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பஞ்சரத உற்சவம் அமைதியான பக்திச் சூழலில் நேற்று நடைபெற்றது.

காலை 6 மணிக்கே தேர்களுக்கு வந்த சுவாமிகள் வீதிகளில் வலம் வந்த போது ஏராளமான மக்கள் அர்ச்சனைகள் செய்தனர்.

ஐந்து தேர்களும் அடுத்தடுத்து வந்த காட்சியை மக்கள் பக்திப்பரவசமாகப் பார்த்தனர்.

காலையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் பஜனைக் கோஷ்டி மாவையை அடைந்து தேர்த்திருவிழாவிற் கலந்துகொண்டது.

பக்தி மயமான சூழ்நிலையில் ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்தும், பிரதட்சணம் செய்தும் தேர்த்திருவிழா பூர்த்தி செய்தனர்.

விசேஷ போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (இ-68)

# பூஸா தமிழ்இளைஞருக்கு கொழும்பில் சிகிச்சை

கொழும்பு, ஆகஸ்ட் 5

பூஸா முகாமில் நோய் வாய்ப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் பலர் பலத்த பாதுகாப்புடன் நேற்று கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டனர்.

இவர்கள் டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் மீண்டும் பூஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இப்படி நேற்று வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த பட்டவர்களின் எண்ணிக்கை 126 என்று தெரிய வருகிறது.

இவர்களில் அனேகமானோர் சிரங்கு, சொறி, சின்னம்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் விசேஷ உத்தரவை அடுத்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குழு ஒன்று கடந்த சனிக்கிழமை பூஸா சென்று தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் நிலைமையை நேரில் கண்டறிந்தது.

இதனைத் தொடர்ந்தே நேற்று சுமார் 126 இளைஞர்கள் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்குக் கூட்டி வரப்பட்டனர்.

நேற்றைய தினமே இவர்கள் அனைவரும் பூஸாவுக்கு திருப்பி அழைத்துச்செல்லப்பட்டு அங்கு வைத்து தற்போது சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் மேலும் பலர் இம்மாதத்துக்குள் விடுதலையாகலாம் என்று நம்பப்படுகிறது.

இவர்கள் சம்பந்தமான விசாரணைகள் பூர்த்தி அடைந்து விட்டன என்றும் இவர்களின் விடுதலை குறித்து அவ்வப் பகுதி அரச உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. (இ-6)

# தமது கணவன்மாரைக் காணவில்லை என்று மனைவியர் இருவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 5

மனைவிமார் பார்த்துக் கொண்டிருக்க பிடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் கணவன்மார் இருவரை தாம் பிடிக்கவில்லை என சிப்பாய்கள் கைவிரிக்கிறார்களாம்.

சம்பவம் பற்றி மனைவிமாரின் புகார்மூலம் அறியப்படுவதாவது:

வயாவிளான் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் இருவர் தம் மனைவியருடன் தம் சொந்த வீட்டைப் பார்வையிடச் சென்றிருந்தனர்.

இவர்களின் வீடுகள் வயாவிளான் மினி முகாமுக்கும் பலாலி முகாமுக்கும் இடையில் ஒரும் பசிக்டிக்கு அண்மையில் உள்ளன.

சம்பவதினம் மினி முகாமிலிருந்து வெளியேறிய சிப்பாய்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்றது.

இச்சமயம் வெளிவந்த சிப்பாய்கள் இவர்கள் இருவரையும் வீட்டில் வைத்துப் பிடித்துக் கொண்டனர்.

மனைவியர் முன்னிலையில் இருவரும் நையப் புடைக்கப்பட்டனர்.

மனைவியர் அழுது கெஞ்சவே "இவர்களை விசாரித்து விடுதலை செய்வோம், நீங்கள் ஓடுங்கள்" என்று சிப்பாய்கள் கூறிக் கணவன்மார் இருவரையும் கூட்டிச் சென்றனராம்.

மனைவியர் இருவரும் அரச அதிபரிடம் இது பற்றிப் புகார் செய்தனர்.

அரச அதிபர் முகாமுடன் தொடர்புகொண்டார்.

மனைவிமார்களை வந்து சந்திக்கும்படி இராணுவ அதிகாரி கூறினார்.

இதைத் தொடர்ந்து இருகுடும்பப் பெண்களும் (4 ஆம் பக்கம் பார்க்க)

### தி. மு. க. வும் போட்டி

சென்னை, ஆக. 4

தமிழ்நாட்டில் இம் மாதம் 31 ஆம் திகதி நடைபெறவுள்ள திருநெல்வேலி, அருப்புக்கோட்டை இடைத்தேர்தல்களில் போட்டியிடுவது என்று திராவிட முன்னேற்றக் கழகமும் ஜனதாக் கட்சியும் தீர்மானித்து உள்ளன.

அ.தி.மு.க தனதுவேட்பாளர்களை ஏற்கனவே அறிவித்துவிட்டது.

அ. தி. மு. க வுக்கு, கொங்கிரஸ் கட்சியும் அ. தி. மு. கவுக்கு இந்திரா காங்கிரஸும் ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளன. (இ-எ)

# எம். பி.க்களின் சகல சலுகைகளும் மா. சபை உறுப்பினருக்கு

யாழ்ப்பாணம், ஆக. 5

மாகாணசபைச் சட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில், மாகாணசபை உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சலுகைகள், அந்தஸ்துக்கள் அனைத்தும் வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சம்பளம், கூட்ட அலவன்ஸ், இலவச தொலைபேசி, பஸ், ரயில் இலவச பயண சலுகை போன்றன மாகாண சபை உறுப்பினர்களுக்கும் கிடைக்க வகை செய்யப்படுமாம்.

இது அரச மட்டத்தில் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்களாக வர முடியாது என்றவாறும் பிரஸ்தாபச் சட்டத்தில் வரையறுக்கப்படுமாம். (அ-21)

# முல்லைத்தீவு வந்த தமிழ் அகதிகள் நிலைமை திருந்தும் வரை திருமலை திரும்பமாட்டார்கள்

யாழ்ப்பாணம், ஆக 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ள திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1, 500 தமிழ்க் குடும்பங்களும், திருமலை நிலைமை திருந்தும்வரை பழைய இடங்களுக்கு திரும்பிச் செல்ல மாட்டார்.

இப்படி தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கு நேற்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவுப் பிரசைகள் குழுவின் தற்காலிக தலைவர் திரு. எஸ். பி. பொன்னம்பலம், உறுப்பினர் திரு கே செல்வராஜா, முன்னாள் செயலாளர் திரு கே தியாகராஜா ஆகியோரும் திரியாய் இடம்பெயர்ந்தோர் சங்க உறுப்பினர்களும் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் சிவத்தம்பியை நேற்றுச் சந்தித்து திருமலைத் தமிழ் அகதிகளின் நிலைமை பற்றி முறையிட்டனர்.

1-8-1986 முதல், முல்லைத்தீவில் தங்கி உள்ள திரியாய்த் தமிழ் அகதிகளுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படமாட்டாது அவர்கள் மீண்டும் திரியாய்க்குத் திரும்பிச் செல்ல வேண்டும்—இப்படிப் புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபர் திரு. ஜெயசெந்தில்நாதன் தெரிவித்து உள்ளார்.

திருமலை மாவட்டத்தில் பதற்றநிலை இன்னும் நீடிக்கிறது.

சுமார் 1 500 திருமலை மாவட்டத் தமிழ்க் குடும்பங்கள் முல்லைத்தீவில் தங்கி உள்ளன.

திருமலை மாவட்ட நிலை திருந்தும் வரை இக்குடும்பங்கள் திரும்பச் செல்லப்போவது இல்லை.

இப்படி தாதுக்குழு பேராசிரியரிடம் தெரிவித்தது.

தன்னாலியன்ற உதவிகளைச் செய்வதாக உறுதியளித்த பேராசிரியர் சிவத்தம்பி பொதுநிறுவனங்களின் உதவியையும் இது விஷயத்தில் கோரும்படி தாதுக்குழுவைக் கேட்டுக் கொண்டார். (இ-எ)

### சுபநேரம்

05—08—1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10-34 முதல் 12-04 வரை
ராகுகாலம்:
3-04 முதல் 4-34 வரை
இன்று வருக்கும் இராகுவும் சேருந்தம்
ஆடி அமாவாசை விரதம்

# பொல்காவலை எம். பி. குற்றவாளி என தீர்ப்பு

## தண்டனை வழங்குவது ஒத்திவைப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 5

பொலிஸ் அதிகாரி ஒருவரைத் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் பொல்காவலை எம். பி. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி குற்றவாளியாகக் காணப்பட்டார்.

கொழும்பு பிரதம நீதிவான் லொலின் அமரசிங்க நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

பொலிஸ் அதிகாரி அடிகன் குணதிலகாவைத் தாக்கியது, அவரது கடமைக்குக் கஷ்டம் விளைவிப்பதாக பயமுறுத்தியது, அவமதிப்புச் செய்தது ஆகிய குற்றச்சாட்டுக்கள் அரச எம் பியான சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி மீது சுமத்தப்பட்டிருந்தன.

விசாரணை முடிவில் சந்தேகத்துக்கு இடமில்லாத முறையில் பொல்காவலை எம் பி. குற்றவாளி (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் முகம்



### சாவகச்சேரி லயன்ஸ் தலைவர்

சாவகச்சேரி, ஆக.5

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் நடப்பாண்டின் தலைவராக ஆயுள்வேதடாக்டரும் ஆரோக்கிய வைத்தியசாலை இயக்குநருமான லயன் பே. பிலிப்பு தெரிவு செய்யப்பட்டார்.

லயன் க. சுந்தரலிங்கம் செயலாளராகவும் லயன் திரு. சே. தியாகராசா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-81)

### நிர்வாகிகள்

கரவெட்டி, ஆக.5

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்கள் சமாஜங்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள் வருமாறு:—

தலைவர் திரு. மகேசலிங்கம், செயலாளர் திரு. ச. செந்தூர்ராஜா, பொருளாளர் திரு பொ சந்திரமூர்த்தி உபதலைவர் திரு என் செல்லையா.

நிர்வாக சபை உறுப்பினர்களாக 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-70)

## திடீர் மழையால் முந்திரிகைப் பழச் செய்கையாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

கடந்த இரு நாட்களாக யாழ் குடாநாட்டில் பரவலாக பெய்த மழையால் முந்திரிகைச் செய்கையாளர்கள் பெரும் அளவு பாதிப்படைந்துள்ளனர்.

அனேகமானவர்களின் முந்திரிகைக் கொடி வெட்டிய பருவத்திலும், காய்ந்து தொங்கும் பருவத்திலும் உள்ளன.

இம்மழையால் அவைகள் கொட்டியும், பழங்கள் வெடித்தும் போய்விடும்.

ஏற்கனவே வெட்டிய பழங்களை போக்குவரத்து கட்டுப்பாடுகளால் சந்தைப்படுத்த முடியாது தவித்த முந்திரிகைச் செய்கையாளர்கள், இம்மழையாலும் பாதிப்படைவதை இட்டு பெரும் கவலை கொண்டுள்ளனர். (இ-5)

# கம்பன் புகழ்பாடி நாம் கன்னித் தமிழை வளர்ப்போம்

## இறுதி நாள் கூட்டத்தில் ஜெபநேசன்

யாழ்ப்பாணம், ஆக 5

கம்பன் புகழ் பாடுவதன் மூலம் நாம் கன்னித் தமிழை வளர்ப்போம். இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள கம்பன் கழகத்தை வாழ்த்துகிறோம்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரியின் உப அதிபர் திரு ஜெபநேசன் கூறினார்.

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்து அவர் மேலும் கூறியதாவது:

கம்பனுக்கு மூன்று நாள் விழா போதாது. 365 நாட்களும் விழா எடுக்க வேண்டும்.

கம்பராமாயணம் போன்ற ஒரு சிறந்த இலக்கியம் இதுவரை எந்த ஒரு மொழியிலும் இருந்தது கிடையாது.

ஆங்கில இலக்கியகர்த்தாக்களில், ஷேக்ஸ்பியர் மனித உணர்வுகளையும், வில்லியம் வேர்ட்ஸ்வேர்த் இயற்கைக் காட்சிகளையுமே வர்ணித்து இலக்கியம் படைத்தனர்.

கம்பன் ஒருவனே உலகியல், அரசியல், நெறிமுறை, அறம், இயற்கை வர்ணனை எல்லாவற்றையும் எல்லாம் சேர்த்து இலக்கியம் படைத்த ஓர் இலக்கியவாதி.

தமிழில் இந்த இலக்கியக் கடலைச் செய்த கம்பனுக்கு விழா எடுப்பது எமது கடன்.

கம்பனின் கவிதைகளை விட அவனது வாழ்க்கை அழகானது.

அவன் தன்னைக் காத்த சடையப்ப வள்ளலுக்கு தன் நன்றிக்கடனைத் தீர்த்தவன்.

இவ்வாறு அவர் கூறினார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இவ்விழா நடைபெற்றது:

வி கே கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பித்த இவ்விழாவை திரு மு கனகரத்தினம் மங்கள விளக்கேற்றி தொடக்கி வைத்தார்.

விழா அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் வரவேற்புரையும் திரு பன் கம்பன் கழகப் பிரமுகர் திரு எஸ் ஜெயச்சந்திரன் தலைமையுரையும் நிகழ்த்தினர்.

பேராசிரியர் அ சண்முகதாஸ் தலைமையில் முதல் நாள் பட்டிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு பட்டிமன்றம் இடம்பெற்றது.

இதில் திருமதி வஸந்தா வைத்தியநாதன், திரு. சி வி கே சிவஞானம், வித்துவான் சி குமாரசாமி, திரு சோ பத்மநாதன், நா சுப்பிரமணிய ஐயர் திரு. இ ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கட்டான இக்கால கட்டத்தில் இறந்து போன அனைவருக்கும் இந்நிமிட மௌன அஞ்சலி, விழா ஆரம்பத்தில் செலுத்தப்பட்டது. (இ-5)

## கிழக்கு பல்கலைக் கழக பீடங்களை ஓர் இடத்தில் நிறுவக் கோரிக்கை

மட்டக்களப்பு, ஆக.5

கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தின் பீடங்கள் பல்வேறு இடங்களில் அமையாமல் வந்தாறுமூலை கல்லூரிச் சுற்றுடலிலேயே அமைய வேண்டும்.

மேற்கண்ட தீர்மானம் அண்மையில் நடைபெற்ற மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச்சபை விசேஷ கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கல்வியாளர் கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல்கலைக்கழகம் தொடர்பாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன, தீர்மானங்கள் வருமாறு;-

பல்கலைக்கழக நிர்வாக அலுவலகம், வர்த்தகம், முகாமைத்துவ பீடம் ஆகியவற்றுக்காக எந்த ஒரு பாடசாலையும் சுவீகரிக்கப்படக் கூடாது.

கட்டட உடனடியாக தேவைப்பட்டால் பிராந்திய அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்பு கொண்டு விபுலானந்த இசை, நடனக் கல்லூரியின் ஒரு பகுதியை தற்காலிகமாக பெறல். இல்லையேல் பொருத்தமான தனியார் கட்டடம் பெறல்.

மேற்படி விடயம்தொடர்பாக பல்கலைக்கழகப் பணிப்பாளர், அமைச்சர்கள் திரு கே டபிள்யூ தேவநாயகம், திரு. செ. இராசதுரை ஆகியோரைச் சந்தித்து உரையாடுதல். (இ-21)

## விவேகமுள்ள மாணவரை கிராம பாடசாலைகள் இழக்கின்றன

யாழ்ப்பாணம், ஆக. 5

ஆண்டு தோறும் மாணவர்கள் பெரிய பாடசாலைகளில் இடம் எடுப்பதற்காக அலைந்து திரிகிறார்கள். தாம் கல்வி கற்ற பாடசாலையில் மேற்படிப்பைத் தொடர வசதி இருந்தும் பிரபல்யமான பாடசாலைகளுக்கு மாணவர்கள் அனுமதி கோருவதைப் பெற்றோரும் ஊக்குவிக்கின்றனர். இதனால் விவேகமான மாணவர்களைக் கிராமப்புறப் பாடசாலைகள் இழக்க நேரிடுகிறது.

நவாலி மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது வித்தியாலய அதிபர் திரு செ. கதிர்காமத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு பாடசாலையின் முன்னேற்றத்தை அப்பாடசாலையிலுள்ள மாணவர்கள் பொதுப் பரீட்சையில் பெறும் பெறுபேறுகளை வைத்து அளப்பது வழக்கம் நாம் மாணவர்களை நற்பிரஜைகளாக்க முயலுவதுடன் முழுமையான கல்வியை ஊட்டுவதில் ஈடுபட்டுள்ளோம் என்பதை மறுக்கவில்லை

அந்த வகையில் இந்து, கிறிஸ்தவ மத போதனைகளுக்கும் சமய அனுட்டானங்களுக்கும் முதலிடம் வழங்கியுள்ளோம்

இந்த ஆண்டு சாரணியம், முதலுதவி ஆகிய பயிற்சிகள் பாடசாலையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன

எமது அபிவிருத்திச் சபை லீவு பெறும் ஆசிரியர்களைக் கௌரவித்து அவர்களுக்கு விழா எடுத்தது யாழ்-மாவட்டத்தில் இதற்கு முன்பு நடைபெறாத நிகழ்ச்சி ஆகும் -என்றார். (இ)

# திருமலை அகதிகள் தொடர்ந்து முல்லைத்தீவு வருகை

யாழ்ப்பாணம், ஆக. 5

கடந்த நான்கு தினங்களாக திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 500க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்

திருகோணமலைப்பகுதியில் அண்மையில் நடைபெற்றுவந்த அசம்பாவிதங்கள் காரணமாக திரியாய், சாம்பல்தீவு, சல்லி, நிலாவெளி பகுதிகளில் இருந்து ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக வள்ளங்கள் மூலம் முல்லைத்தீவை வந்து சேர்ந்துள்ளனர்

மூன்று பெரிய வள்ளங்களிலும், இரண்டு சிறிய வள்ளங்களிலுமாக ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் ஐநூறு பேர் முல்லைத்தீவு வந்துசேர்ந்தனர்.

இவர்களுக்கான உதவிகளை சர்வோதய இயக்கமும், செடெக் இயக்கமும், அகதிகள் புனர்வாழ்வுக்கழகமும் வழங்கி வருகின்றன. (இ-10)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஆக 5

தென் புலோலி, முருகையா கோவிலடி, அறிவகம் சனசமூக நிலைய 31 ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப்போட்டியும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

திரு. அ செல்வரத்தினத்தின் தலைமையில் பொதுக் கூட்டமும் பரிசளிப்பும் நடைபெறும்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரையும், வருத்தித்துறை மத்திய பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கமும் பிரதம விருந்தினர்களாக பங்கு பற்றுகிறார்கள். (இ)

## பல்கலைக்கழகம் செல்வதற்காக மட்டும் படிக்கும் நோக்கம் கூடாது

### கல்வி அதிகாரி சொல்கிறார்

உடுப்பிட்டி, ஆக. 5

கல்வி கற்பவர்கள் எல்லோரும் பல்கலைக் கழகத்துக்குச் செல்லமுடியாது. குறிப்பிட்ட சிலருக்கே அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஆனால் எல்லோரும் படிப்பறிவு உடையவர்களாக இருக்க வேண்டும். எனவே பல்கலைக்கழகம் போகும் நோக்கத்துடன் மட்டும் படிக்கக் கூடாது

இவ்வாறு புலோலி — அல்வாய் மக்கள் ஒன்றியம் அண்மையில் சாத்திரியார், புலோலி தெற்கில் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு 'மாணவர்களின் கல்வியில் பெற்றோரின் பங்கு'' என்னும் விடயம் பற்றி உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ சுசுவரபாதம் கருத்துரை வழங்கினார்.

இக்கருத்தரங்கிற்கு புலோலி — அல்வாய் மக்கள் ஒன்றியத் தலைவர் திரு. ஆ சி தம்பிமுத்து தலைமை வகித்தார்.

திரு சுசுவரபாதம் தொடர்ந்து கூறியதாவது:—

பிள்ளைகளின் மனநிலையை அறிந்து பெற்றோர்கள் நடக்கவேண்டும் எந்த விடயத்திலும் பிள்ளைகளின் மனநிலை பாதிக்காது நடக்கவேண்டும். அப்போது தான் பிள்ளைகள் தமது கல்வியைத் தொடர்வது இலகுவாக இருக்கும்

ஆசிரியர்களும், பெற்றோர்களும் சந்தித்து பிள்ளைகளின் குறைநிறைகளைப் பற்றி ஆராய்ந்து தமது பிள்ளைகளின் கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையே அல்லது பின்னடைவையோ அறியக்கூடிய நிலைமை முன்பு காணப்பட்டது. ஆனால் இப்பொழுது ஆசிரியர்களும் பெற்றோர்களும் சந்திப்பதில்லை. பிள்ளையின் நிலைமையை பெற்றோர்கள் அறியமுடியாதுள்ளனர் —என்று அவர் சொன்னார் (-157)

## தபால் சேவகருக்கு நேர்மை, கடமை அவசியம்

### பாராட்டு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, ஆக 5

தபாற்சேவையில் ஈடுபடுவோர் அனைவரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்தவர்களாகவும் நேர்மை மிக்கவர்களாகவும் திகழவேண்டும் இத்தபாற்கந்தோரில் கடந்த முப்பது வருடங்களாக தபாற் சேவகராக கடமையாற்றி இளைப்பாறும் திரு கனகரத்தினம் சிவானந்தன் ஒழுக்கம், நேர்மை, பண்பு முதலான நற்பண்புகளை பெற்றிருந்ததினாலேயே கடைசிவரை மக்கள் மத்தியில் நன்மதிப்புடன் விளங்கினார்.

சங்கானை தபாற்கந்தோரில் சுமார் முப்பது ஆண்டுகளாக தபாற் சேவகராக கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. கனகரத்தினம் சிவானந்தனுக்கு நடத்தப்பட்ட பசவை நலம் பாராட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய தபாலதிபர் திரு. இ. கசிராசலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழா சங்கானை தபாற்கந்தோர் உத்தியோகத்தர்கள் ஊழியர்களினால் நடத்தப்பெற்றது.

விழாவில் திரு. கணேசராசா, திரு. து. தேவராசா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் பாராட்டுரை வழங்கினர்

இளைப்பாறிய தபாற் சேவகர் திரு க சிவானந்தன் பதிலுரையும், நன்றியுரையும் வழங்கினார். (இ-161)

## கிளிநொச்சி அகதிகளுக்கு இன்னும் உதவி இல்லை

யாழ்ப்பாணம், ஆக 5

கடந்த ஜூன் மாதம் கிளிநொச்சிப் பகுதியில் நடைபெற்ற மோதல்களின்போது பாதிக்கப்பட்டு வெளியேறிய மக்களுக்கு இதுவரை எந்த வித நிவாரண உதவியும் அரசினால் வழங்கப்படவில்லை

இச்சம்பவங்களினால் ஆறாயிரம் பேர் வரையில் உடைமைகளை இழந்து அகதிகளாக உள்ளனர்

இவர்களுக்கான தேவைகளை கிளிநொச்சி தொண்டர் ஸ்தாபனங்களும் பொது ஸ்தாபனங்களும் மேற்கொண்டு வருகின்றன (இ-10)

### சேமக்காலை திருத்தப்பட்டது

பலாலி, ஆகஸ்ட் 5

ஏழாலை வடக்கில் உள்ள சி. எம். ஐ. மிஷனைச்சேர்ந்த சேமக்காலை நாற்பதாயிரம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இளைப்பாறிய தபால் அதிபர் திரு. டீ. ஜே. சேனாதிராஜா இதற்கான உதவிகளை வழங்கினார். (இ - 119)

### சனசமூகநிலைய திருத்தவேலைகள்

நெல்லியடி சனசமூக நிலையத்தின் கட்டட திருத்த வேலைகள் தற்போது நடைபெறுகின்றன. (இ - 70)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# கலப்படமற்ற உணவு பொருள்களை பாவனையாளர்களுக்கு வழங்குக

### உதவி ஆணையாளர் கோரிக்கை

வட்டுக்கோட்டை, ஆக 5

மா, பாண் ஆகிய இரண்டு பொருள்களுக்கு மாத்திரமே தற்போது விலைக் கட்டுப்பாடு உண்டு. இருந்தாலும் ஏனைய பொருள்களையும் வியாபாரிகள் பாவனையாளர்களின் நலன் கருதி சகாய விலையில் விற்க முன்வரவேண்டும் உயிருக்கு ஆபத்தில்லாத கலப்படமற்ற தரமான உணவுப் பொருள்களைப் பாவனையாளர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பாவனையாளர் சங்கங்கள் செயற்பட வேண்டும்.

வலிமேற்குப் பிரதேச பாவனையாளர் சங்க பயிற்சிநெறி வகுப்பு தன்கோணி கணேச வித்தியாலயத்தில் நடைபெற்றது

அதில் சிறப்புரை வழங்கிய உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. சி த. மார்க்கண்டு மேற்கண்டவாறு கூறினார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் பயிற்சி நெறிவகுப்பு நடைபெற்றது.

திரு. மார்க்கண்டு தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது!

பாவனையாளர்களுக்கு உதவிசெய்வதே பாவனையாளர் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும்.

யாழ் மாவட்டத்தில் சுமார் 148 பாவனையாளர் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் அங்கம் வகிப்போர் கடைகளில் காணப்படும் குறைபாடுகளை அறிவிக்கத் தயங்கக்கூடாது

சுகாதாரமற்ற தரக் குறைவான உணவுப் பொருள்களை வியாபாரிகள் விற்பனை செய்வதை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாவனையாளர் சங்கங்களின் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அட்டைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் கடைகளுக்கு நேரில் சென்று அளவைகளை அவதானித்து குறை குற்றங்களை அறிவித்து பாவனையாளர்கள் பலன்பெறும் வகையில் சேவையாற்ற வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. ... இரத்தினம், அளவைகள், நிறுவைகள் பரிசோதகர் திரு. எஸ் ரூபேந்திரம் ஆகியோரும் பயிற்சி நெறிவகுப்பில் உரையாற்றினர்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சுப்பிரமணியமும் வைபவத்தில் கலந்துகொண்டார்.

வலிமேற்குப் பிரிவிலுள்ள பாவனையாளர் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரும் கிராமசேவையாளர்களும் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேச பாவனையாளர்சங்க உறுப்பினர் திரு. மார்க்கண்டு நன்றி கூறினார். (இ-161)

## "பாரதி பாடல்களை சிங்கள மக்களுக்கு அறிமுகம் செய்தவர் கே.ஜி.ஏ'

உடுவில், ஆக 5

"பாரதி பாடல்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து அவரின் பெருமையை சிங்கள மக்களும் அறிந்து கொள்ளச் செய்தவர் அமரர் அமரதாஸ. அது அவர் செய்த உயர்ந்த கலைத் தொண்டாகும்.''

சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையத்தினர் எழுத்தாளர் அமரர் கே. ஜி. அமரதாஸவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடத்திய கூட்டத்தில் தலைவர் திரு.செ. தேவசேனாதிராஜா பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. வைரமுத்து மேடையில்' தமிழர்—சிங்கள மக்களிடையே உண்மையான இன ஒற்றுமை ஏற்பட வேண்டும் என மேடையில் மட்டும் பேசிக் கொண்டிருக்காமல் அந்த உயரிய பணிக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த பெரியார் அமரர் கே. ஜி. அமரதாஸ அவர்'' என்று தெரிவித்தார்.

டாக்டர் செந்தில்,சி. ஜெயதாஸ் உட்பட பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். (அ-27)

## பாதிக்கப்பட்டோருக்கு மாவிட்டபுரம் லயன்ஸ உதவிகளை வழங்கும்

காங்கேசன்துறை, ஆக.5

இன்றைய கால கட்டத்தில் தவிர்க்க முடியாத சூழ்நிலையால் பாதிப்படையும் மக்களுக்கு உதவ மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் முடிவு செய்துள்ளது.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழக புதுவருட நிர்வாகிகள் பொறுப்பேற்கும் வைபவம் மாவிட்டபுரத்தில் நடைபெற்றபோது இப்படியான முடிவு எடுக்கப்பட்டது.

புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு. பி ஜே அந்தோனிப்பிள்ளை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

முன்னாள் தலைவர் திரு. ஆர். மனோகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

புதிய நிர்வாக சபையினர் பொறுப்பேற்றதை அடுத்து பல விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இன்னல்படும் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் விவசாய அபிவிருத்தி, பற்சிகிச்சை, முதலுதவி முகாம் போன்ற விடயங்களை இவ்வருடத்தில் மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது

இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட லயன்ஸ் கழக பிரதி பயிற்சிநெறி ஆணையாளர் திரு. இ. விஜயரத்தினமும் கலந்து கொண்டார். (இ-68)

## ஆசிரியர் பயிற்சி வகுப்பு

கைதடி, ஆகஸ்ட் 5

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தின் வசதிகள் சேவைகள் கட்டணப் பாடசாலை அபிவிருத்திச் சங்க சமாசம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சிவகுப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இப்பயிற்சிவகுப்பு ஆரம்பவகுப்பு (ஆண்டு 1—6) ஆசிரியர்களுக்காகவே சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரியால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல் கடிதம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பும்படி பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க நியமனம் பெறாத ஆசிரியர்களின் கற்பித்தல் முறையை திறம்பட செய்வதற்காகவே இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ - 74)

உ
அம்பிகை துணை

சாவகச்சேரி

அருள்மிகு துர்க்கை அம்பாள் தேவஸ்தானம்

மாதரசிகள் பங்குகொள்ளும்

மங்கள தீப பூஜை

(சுமங்கலி தீப பூஜை)

அன்புடையீர்!

எதிர்வரும் ஆடி மீ 24 உ (8-8-86) வெள்ளிக்கிழமை ஆடிப்பூரத் திருநாளன்று காலை 8.00 மணியளவில் அம்பாளுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும், பிற்பகல் 3-00 மணியளவில் மாதரசிகள் பங்கு கொள்ளும் தீப லக்ஷ்மி பூஜையும் நடைபெறும்.

இப்பூஜையில் பங்குபற்ற விரும்பும் பெண்மணிகள் மேற்படி தேவஸ்தானத்தில் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

அன்று மாலை—

'அருள்மொழி அரசி'
வித்வான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்
அவர்கள்

★ அன்னை அருள் ★

என்னும் விடயம் பற்றிச் சிறந்த சொற்பொழிவு ஆற்றுவார்.

துர்க்காதேவி அருள் பெறுக

இங்ஙனம்,
பிரம்மஸ்ரீ ப மஹாகணபதி சர்மா
ஆதீனகர்த்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

அற்ப பொருளுக்காகத் தாகம் கொண்டுள்ள அடியேன் மனதில் அருள்தாகம் கொள்ளும்படி அண்ணலே, தேவரீர் அருள்புரிவீராக!

— சுவாமி சித்பவானந்தா

உதயன்

உண்மை - நிர்ப்பயம் - நடுநிலைமை

இல. 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
கின்சார் நிலைய வீதி 22073
யாழ்ப்பாணம். 05-08-86 த பெ 23

## அந்தோ கலைந்தது அவரது வேஷம்!

சமாதான முயற்சிகள் ஏதாவது ஒரு காரணத்தினாலாவது தோல்வி கண்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும்.

இவ்வாறு மீண்டும் போர்க்கொடி உயர்த்தி இருக்கிறார் இலங்கை நாட்டின் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன.

மாகாணசபை தான் அவரது சமாதான முயற்சி அதற்கு மேல் அவர் அசைய மாட்டார் என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இந்த நாட்டுக்குச் சமஷ்டி அரசமைப்புப் பொருத்தமற்றது வடக்கு—கிழக்கு இணைப்பு இல்லை தற்போதைய மாகாண எல்லைகளை மாற்ற அனுமதிக்க மாட்டோம் என்று அவர் கூறியிருக்கிறார்.

அது மாகாண சபைக்கு மேல் எதையும் தமிழர்களுக்கு வழங்க முடியாது என்று அடித்துச் சொல்வது போல — அழுத்தம் திருத்தமாகச் சொல்வதாகக் கொள்ளப்பட வேண்டியது.

மாகாண சபைகள் நகல் சட்டத்தை அரசாங்கம் இன்னும் தயாரித்து முடிக்கவில்லை. ஆனால் அரசு—கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சுக்கான நகல் அடிப்படை யோசனையை இந்தியா தயாரித்துக் கொடுத்து விட்டது. அந்த யோசனைகள் மாகாண சபைகள் திட்டத்தை விடச் சற்றுக் கூடுதலானதாகச் சொல்லப்படுகிறது.

அதனை அறிந்துதான் இங்கு இவர் சன்னதம் கொள்கிறாரோ என்று சிலர் எண்ணக்கூடும். அல்லது தென்னிலங்கையில் உள்ள அரசு விரோதச் சக்திகளைச் சாந்தப்படுத்துவதற்காகவும் இதனை அவர் சொல்லியிருக்கலாம். அல்லது தமிழர் பக்கத்தாலும் நெருக்குதல், சிங்களவர் பக்கத்தாலும் நெருக்குதல் என்பதால், இரண்டும் கெட்டான் நிலையில் விரக்தியால், அதனால் எழும் ஆவேசத்தினால், அப்படிச் சொன்னாரோ தெரியவில்லை.

காரணம் எதுவாயிருந்தால் என்ன? உள்ளத்தில் இல்லாதது நாவில் வராது. 1977-ம் ஆண்டு தொடக்கம், "போர் என்றால் போர்" என்று கூறிய நாட் தொடக்கம், தமிழர் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் அவர் போர் விரும்பியாகவே இருந்து வருகிறார்.

அரசாங்கத்தைப் போருக்கு உஷார்ப்படுத்துவதற்காக, அல்லது உலகத்தை நம்பச் செய்து உதவி பெறுவதற்காக, அவர் இடைக்கிடையே தாம் ஒரு சமாதான விரும்பியாகக் காட்டிக் கொள்வது உண்டு. அப்படி வேஷம் போடுவதில் அவர் கை தேர்ந்தவர்.

அவ்வாறு செய்து அவர் தமிழ்த் தலைவர்களை மட்டுமன்றி இந்தியாவையும், உலகத்தையும் வெற்றிகரமாக ஏய்க்காட்டியிருக்கிறார்.

யுத்த நிறுத்தம் செய்யாமல் இவர் சமாதானப்புறவையைக் கைப்பிடித்ததாகச் சொன்னபோதே, உண்மையான விருப்பத்துடன் தான் அதனைப் பிடிக்கிறாரா அல்லது நடிக்கிறாரா என்ற சந்தேகம் உண்டானது. 29-06-86 இதழ் உதயனில் அந்தச் சந்தேகம் "சமாதானமா சண்டையா?" என்ற தலைப்பில் எழுப்பப்பட்டிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதன் பின்னரும், ஜனாதிபதியின் சமாதான முயற்சி உண்மையானது தானா என்பது குறித்துப் பல தடவைகள் உதயன் சந்தேகம் எழுப்பியிருந்தான்.

அவர் போட்ட சமாதான வேஷம் வெறும் நடிப்புக்காகத் தான் என்பது இப்போது நூற்றுக்கு நூறு ஊர்ஜிதமாகி விட்டது.

அவர் இராணுவ நடவடிக்கை என்று கூறுவது தமிழர்களை அழிப்பதைத்தான். போராளிகளைக் கொல்வதாகக் கூறியவாறே தமிழர்களைக் கொல்லும் சம்பவங்கள் இப்போதும் தொடராமல் இல்லை. அது மேலும் தீவிரம் அடையும் என்பதை ஞாயிற்றுக்கிழமை வெள்ளைப்புவையில் கூறிவிட்டார்.

இனி என்ன சொல்ல உண்டு. அவர் சன்னதம் கொள்ளவில்லை? அவரது வேஷம் கலைந்து விட்டது!

தமிழ் மக்களே தமிழ்த் தலைவர்களே, கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.

இலங்கை அரசுக்குத் தாராளமாக நிதி உதவி செய்த மேற்கத்திய நாடுகளே, உலக வங்கியே கவனத்தில் கொள்ளுங்கள்.

இந்தியாவே, உலகமே கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் எல்லோரையும் நன்றாக ஏய்த்து விட்டார் இலங்கையின் தார்மீகத் தலைவர்!

## மாவை வாழ்வே மனத்துயர் களைவாய்!

மாவையாம் பதியில் வந்தே
மனத்துயர் சொல்வோர்க் கென்றும்
சாவையாம் தவிர்ப்போம் என்றே
சண்முகா அபயம் நல்காய்
கோவையாம் கவிகள் போற்றும்
கொற்றவா குமரா பார்க்கும்
தேவையாம் காப்பு நல்கித்
தெம்புநீ தருவாய் என்றும்.

கவலைகள் எல்லாம் நெஞ்சில்
கடலலை போன்றே நித்தம்
சவலைகள் ஆக்கி எம்மைச்
சத்தமும் வதைக்கு தந்தோ
திவலைகள் அன்ன வாழ்வில்
தினம்தினம் மடிவோர் தன்னுள்
அயலைகள் ஆளும் ஸ்வாமி
அநீதியை ஒழிப்பாய் வந்தே.

— சிங்கையாழியான்

* இன்று மாவைக்கந்தன் தீர்த்தத் திருவிழா. அதையொட்டி இக்கவிதையை வெளியிடுகிறோம்.

## பிரிட்டிஷ் விமானத் தளம் மீது தாக்குதல்

நிக்கோஷியா, ஆக 4

சைப்பிரஸில் உள்ள பிரிட்டனின் மிகப்பெரிய விமானத்தளத்தின் மீது ரொக்கட் மற்றும் பீரங்கிக் குண்டுகளால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பி.பி.ஸி. இது பற்றி வெளியிட்டுள்ள செய்தியில் ஒரு வாகனத்திலிருந்து மூன்று குண்டுகள் வீசப்பட்டதாகவும் இதனால் சிலர் காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டைக்குப் பின்னர் விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்று தாக்குதல் நடத்திய வாகனத்தை விரட்டிச் சென்றது.

வெளிநாடு ஒன்றில் பிரிட்டனுக்கு இருக்கும் மிகப் பெரிய விமானத் தளம் இதுவாகும். 1400 பிரிட்டிஷ் துருப்பினர் அங்கு இருக்கின்றனர்கள்.

1960 ஆம் ஆண்டு சைப்பிரஸ் சுதந்திரம் பெற்ற பின்னர் இந்த விமானத் தளத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும். (இ-ஓ)

# கல்வி முறை மாறினால் இனவாதம் ஒழியும்

## தென் ஆபிரிக்க நிலைமை குறித்து லண்டன் மாநாட்டில் ராஜீவ்

லண்டன், ஆக 4

தென் ஆபிரிக்காவில் உள்ள கல்விமுறை இன்னமும் இனப்பாகுபாட்டுக் கொள்கையை வளர்ப்பதாகத்தான் இருக்கின்றது. இதை மாற்றினால் ஒழிய உண்மையான மாற்றம் எதையும் ஏற்படுத்தி விட முடியாது.

இவ்வாறு லண்டனில் நடைபெறும் ஏழு நாடுகள் பங்குபற்றும் காமன்வெல்த் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

பிரிட்டோரியா ஆட்சிக்கு எதிராக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் எனப் பரிசீலிக்கத் தாம் தயாராக இருப்பதாக திருமதி மார்கிரட் தட்சர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா, கனடா, இந்தியா ஆகிய நாடுகள் அடங்கிய ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை தென் ஆபிரிக்காவிற்கு எதிராக தடைகள் விதிக்க ஆராய அமைக்க வேண்டும் என்ற யோசனையை ஸாம்பியா ஜனாதிபதி கெனத் கௌண்டா வெளியிட்டார்.

உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்களுக்கு திருமதி தட்சர் இன்று விருந்தொன்றை அளிக்கின்றார்.

இம்மாநாட்டுக்கு பஹாமாஸ் பிரதம மந்திரி சேர் லிண்டன் பிண்ட்லிங் தலைமை வகிக்கிறார். (இ-ஓ)

### நடராஜர் சிலை லண்டனில் மீட்பு

லண்டன், ஆக. 4

தமிழ் நாட்டில் சில வருடங்களுக்கு முன் களவுபோன ஆறு வெண்கலச் சிலைகளை மீட்பதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவற்றுள் ஒன்றான 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விலைமதிப்பற்ற நடராஜர் சிலை தற்பொழுது இங்கிலாந்தில் ஸ்கொட்லாண்ட் யார்ட் வசம் உள்ளது.

பிரிட்டிஷ் மியூசியத்துக்கு சுத்தப்படுத்துவதற்கென அனுப்பப்பட்டுள்ள நடராஜர் விக்கிரகத்திற்கு உரிமை கொண்டாடும் அமெரிக்க எண்ணெய் நிறுவனமொன்று விக்கிரகத்தை தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

30 லட்சம் ரூபா மதிப்புள்ளதாகக் கருதப்படும் நடராஜர் சிலை 1976ஆம் ஆண்டில் தஞ்சாவூரிலிருந்தும் ஏனைய 5 சிலைகளும் தி. ச்சியிலும் களவு போயிருந்தன. (ஓ)

## வெளி உலகில்

### ரஷ்யாவிலிருந்து வெளியேற அனுமதி

ரஷ்ய சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் வெளிநாட்டில் குடியமர அனுமதியளிக்கப்பட்ட ஒருவரின் குடும்பத்தினரும் ரஷ்யாவை விட்டு வெளியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### செங்கடல் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை

செங்கடல் பகுதியில் உள்ள எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரவேல் அதிகாரிகளுடன் அமெரிக்க பிரமுகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

### பிரிட்டன் கோரிக்கை

49 நாடுகளைக்கொண்ட காமன்வெல்த் தென்னாபிரிக்காவிற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ள முன்னர் ஏனைய நாடுகளுடன் இதுபற்றிக் கலந்துரையாடவேண்டும் என பிரிட்டன் கேட்டுள்ளது.

### அஸாமில் எண்ணெய்

அஸாமில் மூன்று கிணறுகளில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் மாதத்தில் இருந்து இவற்றில் எண்ணெய் உற்பத்தி தொடங்கும். (இ-ஓ)

## மலேசியா தேர்தலில் ஆளும் கூட்டணி அமோகவெற்றி

கோலாலம்பூர், ஆக. 4

மலேசியாவின் பொதுத் தேர்தலில் பிரதமர் டாக்டர் மாதீர் முகமது தலைமையிலான தேசியக் கூட்டணி அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றியைத் தக்கவைத்துள்ளது.

177 பிரதிநிதிகளைக் கொண்ட மலேசியா நாடாளுமன்றத்தில் பிரதமரின் கூட்டணியினர் 148 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மாநிலத்தின் 11 அசெம்பிளி ஆசனங்களையும் பிரதமரின் கூட்டணி தனதாக்கியுள்ளது.

எதிர்க்கட்சியினர் 24 ஆசனங்களைப் பிடித்தனர். இஸ்லாமியக் கட்சி ஓர் ஆசனத்தையும் சுயேட்சையாளர் 4 தொகுதிகளையும் பெற்றனர். (ஓ)

# பிதிர்கட்குச் சேமம் தருவது ஆடி அமாவாசை

ஆடி மாதம், மங்களகரமான காரியங்களுக்கு விலக்கப்பட்ட மாதமாக இருந்த போதிலும் ஆடி அமாவாசையினால் அது சிறப்படைகின்றது. "ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்ற பாடலும் ஆடிப்பிறப்பன்று கூழும் பனங்கட்டியும் கூடிக் குடிப்பதும் அம்மாதத்தை மனதில் நிலைக்கச் செய்கின்றன. மேலும் ஆடி மழையில் தேடிவிதை என்பதும் அம்மாதத்தின் நினைப்பை நீக்குவதில்லை. ஆடிப்பதினெட்டில் தமிழ்நாட்டில் ஆடிப் பெருக்கு கொண்டாடப்படுகின்றது இது பழந்தமிழ் நூல்களில் புனலாடல் என்று குறிப்பிடப்படுகின்றது.

எனவே ஆடிமாதமும் மக்கள் கூடிக் குலவி மகிழும் மாதமாகின்றது.

சித்திரா பௌர்ணமியும் ஆடி அமாவாசையும் சிறப்புப் பெற்றவை. இவை ஆண்டிற்கு ஒரு முறை வருபவை. மாதந்தோறும், பௌர்ணமியும், அமாவாசையும் வருவதாலும் சித்திரா பௌர்ணமியும், ஆடி அமாவாசையும் சிறப்புடையன. ஏனெனில் இவை சகல பௌர்ணமி, அமாவாசை விரதங்களை அனுட்டித்த பலனைக் கொடுக்க வல்லன.

இந்து மதம் ஐம்பெரும் வேள்விகளைப் பற்றிக் கூறுகின்றது இவற்றுள் பிதிரு வழிபாடும் ஒன்றாகும். வள்ளுவர் பிதிருக்களைத் தென்புலத்

- பரமேஸ்வரி சிவராமலிங்கம் -

தார் என்று கூறுகிறார். தென்திசைக் கடவுள் யமன். எனவே யமனிடம் சென்றவர்களைத் தென்புலத்தார் எனலாம் பிதிரு வழிபாட்டிற்குச் சிறந்த தினங்கள் சித்திராபௌர்ணமியும் ஆடி அமாவாசையுமாகும்.

நாம் செளக்கியமாக வாழ வேண்டுமென்றால் தேவர்களை ஆராதிக்க வேண்டும் பிதிருக்களைத் திருப்தி செய்ய வேண்டும். தேவர்களைப் பிரீதி செய்வதற்காக ஹோமங்கள், யக்ஞங்கள் செய்யப்படுகின்றன.

பிதிருக்களைப் பிரீதி செய்வதற்காக சிராத்தம், தர்ப்பணம் ஆகியன செய்கிறோம் தெய்வகாரியங்களுக்கு பக்தி வேண்டும் பிதிரு காரியங்களுக்கு சிரத்தை வேண்டும். சிரத்தையாகச் செய்யப்படுவதால் தான் சிராத்தம் எனப்பட்டது. சிரத்தை இல்லாதவன் தேவர்களுக்கு நிவேதனம் அளிக்கத் தகுதியற்றவன். சிரத்தையுடன் அளிக்கப்படும் உணவைத்தான் விருந்தாளி உண்ணவேண்டும்.

மனமொன்றி பிதிருக்களுக்கு சிராத்தம் செய்தால் அவர்கள் எம்மை வாழ்த்துவார்கள். எம் வாழ்வு வளமுறும்.

பிதிருக்களுக்கு நமது ஒருவருடம் ஒருநாள் ஆனதால் நாம் அவர்களுக்குச் செய்யும் சிராத்தம் அவர்களுக்கு தினம் உணவு கொடுப்பது போலாகும். அமாவாசையில் எள்ளும் தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் செய்வது அவர்களுக்கு தாகத்திற்குத் தண்ணீர் தருவது போலாகும்.

மாதந் தோறும் வரும் பௌர்ணமி, அமாவாசைத் தினங்களை அனுட்டிக்க இயலாதவர்கள் வருடத்தில் ஒருமுறை வரும் சித்திரா பௌர்ணமியையும், ஆடி அமாவாசையையும் அனுட்டித்து தென்புலத்தாருக்குரிய கடமையில் தவறாது, அவர்களை திருப்திபடுத்த வேண்டும்.

'தென்புலத்தார், தெய்வம், விருந்து ஒக்கல், தான் என்று ஆங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'

### அன்னதானம்

யாழ்ப்பாணம், ஆக. 5

நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவாலயத்தில் ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை அன்னதானம் வழங்கப்படும். (இ)



குறள்:
நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

பொருள்:
பிறரிடமிருந்து பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்லநெறி என்றாலும் கொள்ளல் தீமையானது; மேலுலகம் இல்லை என்றாலும் பிறர்க்குக் கொடுப்பதே நல்லது.

## நாட்டுக் கூத்துகளில் அதிக நாடகங்களை ஆக்கியோர் கத்தோலிக்கர்

### வெளியீட்டுவிழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 5

ஈழத்து நாட்டுக் கூத்துக்களிலே அதிக நாடகங்களை ஆக்கியவர்கள் கத்தோலிக்க தமிழர்களே.

பேராசிரியர் திரு சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கவிஞர் தேவதாசனால் எழுதப்பட்ட புனித-பிரான்சிஸ் அசிசியார் நாடக நூல் வெளியீட்டு விழா பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

வாழ்த்துரையை வணபிதா இக்லதி ஜெயஜெயநேசன் வழங்கினார்.

விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ் மறை மாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பேசுகையில்:-

1986ஆம் ஆண்டை பரிசுத்த பாப்பரசர் சமாதான ஆண்டாகப் பிரகடனப்படுத்தி யுள்ளார். கிறிஸ்துவின்பின் 13ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த புனித-பிரான்சிஸ் அசிசியார் சமாதானத்தின் கருவியாக தன்னை ஆக்கியருளவேண்டுமென்ற திருவாக்கை உலகமெல்லாம் பரப்பி அதன் மூலம்தான் வாவிடமீட்பு ஏற்பட முடியுமென்று நிரூபித்துக் காட்டினார்.

அந்த புனிதர் சிறப்பித்த சமாதானத்தைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட புனித பிரான்சிஸ் அசிசியார் நாட்டுக் கூத்து வெளியீட்டு விழாவில் பங்கு கொள்வதையிட்டு பெருமை கொள்கின்றேன் என்றார்.

தினகரன் ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் பேசுகையில், கவிதைமூலம் நல்லதோர் ஆக்கத்தைத் தந்த கவிஞர் தேவதாசன் திறமை மெச்சத்தக்கதாகும் என்றார்.

நூல் வெளியீட்டு விழாவின்போது வடமாகாணத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட நாட்டுக்கூத்து அண்ணாவிமார்களின் இசையரங்கும் இடம்பெற்றது. (இ-10)

### மீனாட்சி அம்மன் திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 5

சண்டிலிப்பாய், மாகிப்பிட்டி ஆச்சணைமைக் கடவை மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் 9 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

18ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் ஆவணிப் பூரணை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இவ்வாலயம் சஜபாகு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. (ஓ)

## வித்தாரம்

என்ன முரளி! இந்தக் கிழமை தொடங்கினதுக்கு உன்னைச் சந்திக்க முடியவில்லை. என்ன விசேஷம் வது வெள்ளைத்தோடை சந்தையால வந்திட்டாய்.

ஓ, அப்பா இண்டைக்கு ஆடி அமாவாசை விரதம். அதால சாப்பாடு நேரத்துக்கு முடிய வேணும் மரக்கறியும் நேரத்தோடை வீட்டை வரவேணும். அப்படித் தானே?

சைவசமய முறைப்படி பிதிர்க்கடன் செய்வது கட்டாயம் இந்தக் காலத்தில் ஆர் உதிலை அக்கறை காட்டுகினம். மாதத்தில அமாவாசை பருவம் எண்டு தப்பாது விரதம் பிடிச்சது எங்கடை தகப்பன்மார் காலத்தில தான்.

உத்தியோகம் — கொழும்பு, வெளிநாடு எண்டு வந்த பிறகு உதெல்லாம் மெத்தக் குறைஞ்சு போய்ச்சுது. எண்டாலும் சிலர் ஆடி அமாவாசையையும், சித்திராப் பருவத்தையும் மறக்கிறதில்லை.

ஆடி அமாவாசை எண்டால் குடாநாட்டில பெயர்பெற்றது கீரிமலை தீர்த்தம் எண்டு சொல்லி வேறு கடற்கரைத் தலங்களுக்கும் போறதுண்டு மட்டக்களப்பில மாமாங்கம், திருகோணமலை கன்னியா.

இப்ப உந்த இடங்களில போய் பிதிர்க்கடன் தீர்க்கிறதெண்டா உயிரைப் பணயம் வைச்சுத் தான் போகவேணும். எல்லாத்துக்கும் கிட்ட காம்புகள்'. அதால சனம் பயத்தோடை தான் அங்கினை போக வேண்டி இருக்குது.

கீரிமலையைப் பொறுத்தமட்டில 84 இலை சனம் அங்க எட்டிப் பார்க்கிறதே பயங்கரமாய் இருந்தது போன வருஷமும் இந்த என்னுமல் போய் வந்தினம் இந்த வருஷமும் ஒரு மாதிரிப் போகலாம் எண்டு சொல்லுகினம்.

நேற்றைக்கு மாவிட்டபுரம் கந்தனுக்குத் தேர். திருக்குமரன் தேரேறி வந்த காட்சி அற்புதக் காட்சி. பஞ்சரதங்கள் பவனி மனத்தை உருக்கியது ஐஞ்சு தேரோடும் அதிசேஷம் அங்கு தான் உண்டு. கிரிவை தலமுப் பூசைகளுக்குப் பெயர்பெற்ற திருப்பதிகளில் அதுவும் ஒண்டு.

முந்தின காலத்தில அங்கை தேர் எண்டால் எள்ளுப் போட்டால் கீழை விழாத கூட்டம். ஆனா இப்ப தாரத்துச் சனம் என்ன அயலூர்ச் சனம் என்ன அச்சத்தோடு தான் கோயிலுக்கு வரவேண்டி இருக்குதே...!

அதுவும் அயலில உள்ள முகாம்வாசிகள் முருகனைத் தரிசிக்க விரும்பினதாகக் கேள்வி. பிறகு ஒரு மாதிரி ஒரு பெரிய அதிகாரியிட்டை விஷயத்தைச் சொல்லி, திருவிழாவைக் குழப்ப வேண்டாம் எண்டு கேட்டு நிப்பாட்டினதாம்.

மாவிட்டபுரம் வருடாந்தத் திருவிழாவில் நாளைக்குத் தீர்த்தம். முருகப்பெருமான் கீரிமலைக்கு எழுந்தருளுவார்.

நாளைக்கு சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும் செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் கொடியேற்றம். இப்ப நாலு மூண்டு மாதமாய் அங்கு நித்திய பூசையே நடக்க முடியாதபடி இருந்தது வருடாந்தத் திருவிழா நடத்த சாமிக்கு ஆமி விடை குடுக்கிற காலமாய்ப் போச்சு.

சந்நிதியைத் தொடர்ந்து வாற திங்கட்கிழமை நல்லூர் கந்தனுக்குக் கொடியேற்றம்.

முருகன் எண்டால் ஆனைவ தாரியான சூரபதுமனுடன் அவன் நடத்திய போர் தான் ஞாபகத்துக்கு வரும். முருகன் கோயில் திரு

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

